TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TAMIL NADU LEGISLATURE LIBRARY
16 ஊ 1978
MADRAS
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATURE
16 சன 1978
MADRAS

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1977, ஆகஸ்ட் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நகர்மன்ற மருத்துவ மனை, நெல்லிக்குப்பம்.

*16 வினா—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

நெல்லிக்குப்பம் நகர்மன்ற மருத்துவ மனையை அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. சி. கோவிந்தராசன்: நீண்ட நாட்களாகவே அந்த மருத்துவமனை டிஸ்பென்சரியாக இருக்கிறது. படுக்கை வசதி கிடையாது. நெல்லிக்குப்பம் ஒரு பெரிய நகரம். இண்டஸ்ட்ரியல் சென்டர். 1968 ஆம் ஆண்டே அது சம்பந்தமான பிரச்சினை வந்து, 5 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. அதை அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பரிசீலிக்கப் படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் இல்லை என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டார்கள். இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இல்லை என்று சொன்னால் பின்னே என்பதும், பேசாமல் இருப்பதற்கு அடையாளம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். இல்லை என்பதற்குக் காரணம் நிதிப் பற்றாக்குறை என்பதுதான். இதை உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பொதுவாக பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகின்ற மருத்துவமனைகள், நிதிப் பற்றாக்குறை காரணமாக சிறப்பாக நடத்தப்படுவதில்லை. கிராம மக்களின் நலனைக் கருதி பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனைகள் அனைத்தையும் அரசே எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. இதைப்பற்றியும் யோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. க. அன்பழகன் : 1971 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் இருபது அல்லது முப்பது ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை, நிதிப் பற்றாக்குறை காரணமாக சரியாக செயல்படாதவற்றை அரசு மருத்துவமனைகளாகவே எடுத்துக்கொள்வது என்பது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் 1976-77 ஆம் ஆண்டில் எவையேனும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா ? அல்லது ஆலோசகர் ஆட்சியில் எவையும் எடுத்துக்கொள்ளப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தற்போது விவரம் இல்லை.

திரு. கோ. இளங்கோவன் : ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள் சரியான முறையில் செயல்படாதது போலவே, திருவையாறில் உள்ள சத்திரம் மருத்துவமனையும் சரியாகச் செயல்படவில்லை. அதையும் அரசு மருத்துவமனையாகவே எடுத்துக் கொள்ள முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : என்னுடைய பதிலை எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.